# முன்னுரை

## (எழுதியவர்: ராஜம் கிருஷ்ணன்)[1]

1948-50க்குள்ளான காலகட்டம். அப்போது நான் உதகை நகரில் இராஜபவன வளாகத்தை ஒட்டிய இல்லமொன்றில் இருந்தேன். மேட்டில் இடம் பெற்றிருந்த இல்லத்தின் கிழே, பசும் புற்றரையாக விரிந்த பள்ளதாக்கு இருந்தது. பசுமைகளிடையே இராஜபவனத்தின் காய்கறி-பூந்த்தோட்டம் வண்ண வண்ணங்களாகச் சிறகுகளை விரித்திருந்தன. இடையே ஒளியிழையாக ஒர் அருவி வளைந்து நெளிந்து சென்றது. அதன் இருமங்கிலும் மஞ்சள் மகரந்தக் காம்பைக் காட்டிக்கொண்டு ஒற்றை முக்கோண இதழை விரித்துக்கொண்டு மங்கல அல்லி (அரம்லில்லி) மலர்கள் முத்தாரம் பதித்திருக்கும். உதகையின் வண்ண மலர்களில் 'வெல்வெட்' நிற ரோஜாவைத் தவிர வேறு மலர்களுக்கு வாசனை கிடையாது. ஆனால் மாளிகை மலர் அலங்காரத்துக்கென பயிரிடப்பட்ட கொடிகளில் 'ஸ்வீட் பீஸ்' (Sweet Peas) என்ற வண்ணவண்ண மலர்கூம்புகள் வாசனையை அள்ளிவீசும். புற்சரிவில் அமர்ந்து இந்த சொர்க்க லோகத்தை அநுபவித்திருந்த நாட்களில்தான் அமரர் விந்தியா - இந்தியா தேவி என்ற பெண்மணியின் சிறப்புச் சிறுகதையைப் படிக்கும் வாய்ப்பு நேரிட்டது. '*நியூயார்க்* **ஹெரால்ட் ட்ரிப்யூன்**' என்ற அமெரிக்க நாளிதழ், 1948 -ன் முற்பகுதியில் அகில உலகச் சிறுகதைப் போட்டி ஒன்றை கல்கி இதழ் வாயிலாக அறிவித்திருந்தது. இந்தப் போட்டியில் தழிழ் எழுத்தாளரும் கலந்துகொள்ளலாம். தமிழ்க் கதைகளைச் சேகரித்துப் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பைக் கல்கி இதழ் எற்றிருந்தது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளில் ஒன்று காதல் இதயம் **Cupid's Alarms** என்ற தலைப்பில் திருமிகு இந்தியா தேவி என்ற பெண்மணியால் எழுதபட்டிருந்ததாகும்.

குகப்ரியை, அநுத்தமா, சரோஜா இராமமூர்த்தி என்று பல பெண் படைப்பாளிகள் தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்றிருந்தார்கள். ஆனால் 'இந்தியா தேவி' என்ற பெயர் எனக்குப் புதுமையாக இருந்தது. 'விந்தியா' புனைப்பெயர் என்று ஊகித்தேன். சாதாரணமாக, கல்யாணி, காந்திமதி, சுபலட்சுமி என்ற பெயர்களில் பெண்கள் அறியப்பட்டிருந்தார்கள்.

'இந்தியா தேவி' என்றால் சுதந்திரப் போராட்ட தேசபக்தக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பாரோ என்று எணினேன். கல்கியில் இரு பகுதிகளாக காதல் இதயம் வெளியாயிற்று.

திருமணம் முடிந்து இளம் தம்பதிகளாக தனிக்குடும்பம் நடத்தும் நாயகியையும் அவள் மனக்கலவரங்களையும் பூவிதழில் படியும் கண்ணுக்குத் தெரியாத இரேகைகளைப் போல் புலப்படுத்தும் ஆசிரியையின் சொற்றிறன் போற்றத்தக்கதாகும். ஏறக்குறைய ஐம்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முந்தைய சமூகத்தில் ஆண்-பெண் உறவுகள் மரபுகளுக்குள் மட்டுமே பார்க்கப்பட்டன. ஒர் இளம்பெண் பிறந்ததுமே, அவள் திருமணம் செய்துகொண்டு ஒரு நாயகனின் நிழலில் குடும்ப உறவுகளைப் பாதுகாக்கவேண்டும் என்ற நியதி அவளையுமறியாமல் பழக்கவழக்க பண்பாடுகளின் வாயிலாக அறிவுறுத்தப்படுகிறது. நாயகி தன்னிலை வெளிப்பாடாகக் கதையை விரிக்கிறாள்.

ஒத்த வயதுடைய தோழிகள்; கணவர்கள் நண்பர்கள். தோழி பிரசவத்துக்குச் சென்ற பிறகுதான் நண்பரின் நடவடிக்கைகள், பேச்சு, நாயகிக்குச் சங்கடங்களைத் தோற்றுவிக்கின்றன. ஆனால்

---

[1]. விந்தியாவின் சிறுகதைத் தொகுப்பு **Cupid Alarms** க்கு வழங்கியது.

கணவனோ இதைப் புரிந்து கொள்பவனாகவே நடக்கவில்லை. ஒருகால் தன் கணவன் இலட்சியமானவன் அல்லவோ? இவள் பிறந்தகம் சென்று தங்குகிறாள். தோழிக்குக் கடிதம் எழுத, அவள் கணவன்மீது அசையா நம்பிக்கை கொண்டவளாக மறுகடிதம் எழுதுகிறாள். தோழி குழந்தையுடன் வந்துவிடுகிறாள். தன் கணவன்மீது சந்தேகம் கொள்ளும் சஞ்சலத்துடன் குழந்தையைப் பார்க்கவருகிறாள். தேவையில்லாத ஆராய்ச்சிகள் தகர்கின்றன. தோழியைக் குழந்தையுடன் சந்தித்த நிலையில், தன் கணவனைப் பற்றிய லட்சிய பிம்பம் சிறிதும் ஊறுபடவில்லை என ஆசுவாசமடைவது மட்டும் கதையில்லை. தோழிக்குத் தன் கணவனின் இயல்பு தெரிந்தும் அந்தக் குறையைக் கண்டும் காணாமலும் நம்பிக்கையைத் தகர்க்காமல் ஒரு பிம்பத்தை இவள் மனதில் பதித்திருக்கிறாளே?

மூட்டல், மோதல், ஆங்காரக்குரல்கள் எதுவுமில்லை.

இந்தச் சிறுகதையைப் படிக்கும்போது, அன்றையச் சூழலும் அதில் உதிக்கும் அழகிய கற்பனைகளுமே மனதில் பதிகின்றன.

இந்தத் தொகுப்பில்[2] அமரர் திருமிகு இந்தியதேவி - விந்தியா எழுதிய 38 சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. அவர் 1947 முதல் 1960 வரையிலும் பல பத்திரிகைகளில் எழுதியிருப்பதாக அறிகிறேன். அக்கால கட்டத்தில் கலைமகள் இலக்கிய வானில் தனக்கென்று ஒரு முதலிடம் பதித்த பத்திரிகை. மாத இதழ்தான். அமரர் திருமிகு கி.வா. ஜகந்நாதன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு இயங்கிய நாட்களில் தமிழ்ப் படைப்புலகுக்குப் புதிய புதிய இளைஞர்களைக் கண்டுபிடித்து அவர் ஊக்கமளித்தார். தமிழ்த் தாத்தா என்று அறியப்பட்ட பேராசான் உ.வே, சாமிநாதய்யரின் தலைமாணாக்கராகத் திகழ்ந்த இலக்கிய பேராசான் திருமிகு கி.வா.ஜ. அவர்கள். கலைமகள் பத்திரிகை டாக்டர் உ.வே.சா, அமரர்கள் பிச்சமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன் ஆகியோரின் எழுத்துகளைத் தாங்கிவந்தது. அமரர்கள் கா.ஸ்ரீ.ஸ்ரீ, த. நா. குமாரசுவாமி போன்ற பிறமொழிச் செல்வர்கள், மராத்திய இலக்கியங்கள் - காண்டேகர் போன்றோரின் படைப்புகள் - வங்கமொழிப்புலமை பெற்றிருந்த திருமிகு த.நா. குமாரசுவாமி, த.நா. சேனாபதி ஆகியோரின் மொழிப்பெயர்ப்புகளையும் தமிழ் வாசகர்களின் அறிவும், இலக்கிய ரசனையும் மேம்படவழங்கிவந்தது.

அக்காலத்தில் கலைமகள் ஆசிரியர் இளம் எழுத்தாளரின் ஆற்றலைத் தூண்ட எத்தனை விதமான சிறுகதைப் போட்டிகள் அறிவித்தார் என்பதைச் சொல்லியாக வேண்டும். வாரத்தின் ஏழு நாட்களின் பெயரையும் அறிவித்து, சிறுகதை போட்டி; ஏழு வண்ணங்களின் பெயரையும் அறிவித்து ஒரு சிறுகதை போட்டி; ஒரே தலைப்பைத் தந்து இருவர் கதையைத் தேர்ந்த சிறுகதை போட்டி. "குளத்தங் கரையில் வேட்டி சட்டை கிடந்தது; ஆளைக் காணவில்லை!" என்றும் "அவள் திடீரென்று கதவைச்சாத்திக்கொண்டு உள்ளேச் சென்றாள்" என்றும் 'ஆரம்பவாக்கியத்தை' அறிவித்து படைபாளரின் கற்பனைக்குதிரைகளைத் தட்டிவிடும் சிறுகதைப் போட்டிகள் . . .

இத்தகைய போட்டிகளில் பங்கேற்று, பல பரிசுக்கதைகளை அமரர் விந்தியா எழுதியிருக்கிறார் என்றறிகிறேன்.

கிழமைக் கதைகளின் போட்டியில் தேர்வு பெற்ற கதையாக ***'கண்ணனின் மாமா'*** என்ற சிறுகதை அமைந்திருக்கிறது. நான்கு வயது நிரம்பாத குழந்தை கடை மாமாவிடம் ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு திண்பண்டம் பெறுகிறான். திங்கள் திராட்சை, செவ்வாய் சீரக மிட்டாய், புதன் பிஸ்கோத்து, என்று கிழமைகளைக் கற்றுக் கொடுக்கிறார். ஞாயிற்றுக் கிழமை கடை கிடையாது. அதனால் சனிமாலை இன்னொரு திண்பண்டம். அப்பா, அம்மா, அத்தை, பாட்டி,

---

[2]. **Cupid's Alarms** தொகுப்பில் இடம் பெறாத, ஆனால் தான் படித்து ரசித்த வேறு சிறுகதைகளை ராஜம் கிருஷ்ணன் இங்கே குறிப்பிடுகிறார்.

என்ற கூட்டுக்குடும்ப உறவின் இனிமைகளுடன் கடைமாமாவும் இணைகிறார். அந்தந்த பருவ இனிமைகள், வளர்ச்சி பெறும் கண்ணன் பள்ளிக்கூடம் போகிறான்.

வண்ணக்கதைகளில் செம்மண் சிறப்புப் பெறுகிறது.

***'வேளை வந்தது'*** என்ற கதையில் தங்கைக்குக் கல்யாணம் ஆகவேண்டும் என்று சகோதரியான நாயகி அக்கறையுடன் முயல்வதுதான் கதை. கோலம் மங்கலப் புள்ளிகளுடன் விரிகிறது. 'செம்மண் பூசுதல் வெறும் அழகு' வெறும் அழகுக் கலை மட்டுமல்ல. அந்தச் சிறப்பைத் தனியாக வெளியாருக்குக் காட்டும் அடையாளமாகவும் திகழ்கிறது.

ஒரே தலைப்பில் இருவரை எழுதும்படி கோரிய கதைகளில் இவர் எழுதியது ***'மாதம் பிறந்தது'*** என்ற சிறுகதை.

தன் கணவர் - வழக்குரைஞர் - மாத முதலில் இரண்டு 'மணியார்டர்' அனுப்பும்படி உதவியாளரிடம் எழுதிக்கொடுக்கிறார், அதில் ஒன்று முதல் மனைவிக்கான 'ஜீவனாம்சம்' என்பதை நாயகி அறிவாள். 'சற்றே ஏறுமாறாக இருபாளேயாயின் கூறாமற் சன்னியாசம் கொள்' என்ற மூதுரைப்படி சேஷாத்திரி சன்னியாசம் கொள்ளவில்லை. வைதேகியை மணந்து, கமலாவுக்கு ஜீவனாம்சம் அளிக்கிறார். மூத்தவள் தன் திறமைகளை மேம்படுத்தி வெளிகாட்டும் முயற்சிகளை ஏற்கவில்லை. இருவருக்குமிடையே சிக்கல்கள் கூர்வாளாக அச்சுருத்தாமல், மீட்சி பெற, சந்தர்ப்பங்கள் வாய்க்கின்றன. உறவுகள் மனித மாண்பை உயர்த்தும் என்ற இலக்கில் கதை அருமையாக அமைந்துள்ளது.

***'சிறு துளி'*** என்ற கதை பெண்களுக்கே இயல்பான பேரம் பேசும் குணத்தை ஒட்டிப் புனையபட்டிருக்கிறது. ஆனால் பேரம் பேசி ஒரு பொருளை வாங்கும்போது 'சிக்கனம்' என்ற ஒரு பட்டுக் குஞ்சம் இணைகிறது. ஆனால், தெருவில் இரண்டணா, நாலணாப் பொருட்களை விற்கும் விற்பானையாளனின் சங்கடங்களை உணரும் பெருந்தன்மையும் ஒரே கோட்டில் சந்திக்கும்போது, சிக்கனப்பட்டுக் குஞ்சலம் அற்பமாக அடிபட்டுப் போகிறது. தனிக்குடித்தனம் செய்யும் இளம் இல்லத்தரசியின் ஆளுமையில் இது புதிய பரிமாணத்தை இசைக்கிறது.

***'விழியின் வெம்மை'*** என்ற தலைப்பில் வெளியாயிருக்கும் சிறுகதை மனித உணர்வுகளை உயர்த்தும் அரிய படைப்பு.

கண் பார்வையற்ற சிறுவனுக்கு தந்தை, சகோதரர்கள், நண்பர்கள் எல்லோருமே ஆதரவாக நின்று வயலின் இசைக்கலைஞனாக உருவாக்குகிறார்கள். அவனுக்கு அந்த இசையைக் கற்பித்தவரும் பார்வையற்றவரே. அவன் கலைஞனாகத் தேர்ச்சி பெற்று, வானொலி, சபைக் கச்சேரிகள் என்று தன் புலமையை விளக்க உறுதுணையாக அவனைப் பற்றிச் சென்றவர் தந்தை தாம். தம் முதிய வயதிலும், இயலாமையை வெளியிடாமல், மகனுக்காக ஒரு வேள்வியே மேற்கொள்கிறார். ஒரு நாள் ரயில் நிலையத்தில், இரவு நேரத்தில், அவனை அமர்த்திவிட்டு பயணச் சீட்டெடுப்பதாகச் சென்றவர், அவன் அருகிலேயே இறுதி சுவாசத்தை விட்டது அவனுக்குப் புரியவில்லை. படிப்பவர் மனங்களை உருக்கும் கதை. ஒளியும் வண்ணங்களும் இசையிலேதான் அவன் காண்கிறான். மத்தாப்பூ வாணங்களை எப்படி அனுபவிக்கிறான்? இறந்து போன தந்தையின் படம் அவனுக்கு எத்தகைய உணர்வுகளை தோற்றுவிக்கின்றன? அவனைப் பொறுத்தமட்டில் அவர் இறக்கவில்லை. அவன் அறிந்த உலகம் தொடு உலகம்தான். அதில் உயிர்த்துவம், சூடு இருக்கிறது. பிறர் பார்வையில் அவன் கண்களில் ஒளி இல்லை; கவனம் இல்லை. ஆனால் ஒளி சூடாக இருப்பதாக அவன் கூறுகிறான். கவர்ச்சிகளைத் தாண்டி மேலான படியில் அவன் தந்தையின் பிரிவை, 'எல்லோரும் அவரைப் பார்ப்போம்தானே?' என்று ஏற்கிறான். கதையின் கட்டுக்கோப்பும் நுணுக்கமான உட்பொருளும் ஆசிரியையின் வெளியீட்டுத்திறனைக் காட்டுகின்றன.

குழந்தைத் தொழிலாளர் குறித்து அக்கறை கொண்ட சமுதாயமாக நம்மைக் காட்டிக்கொண்டிருக்கிறோம். அறுபது ஆண்டுகளுக்குமுன் குடும்பத் தலைவன் இல்லாமலாகிவிட்டால் வயிற்றுப் பிழைப்புக்காகப் படிப்பைப் பாதியில் விட்டு ஓட்டல் பணியாளாகத்தான் போகவேண்டும். படிப்பு வராவிட்டாலும், "போ போ, ஓட்டலில் காபி ஆற்றப்போ! அதுதான் உன் தலைவிதி! இல்லையே, எருமை மேய்!" என்று திட்டுவார்கள். (இன்றைய நிலை வேறு: ஆயிரம் ஆயிரமாகக் கட்டி, ஓட்டல் தொழிலுக்கும் படிக்க வைக்கிறார்கள். எருமை பாலித்து பால்பண்ணை நிர்வாகம் செய்வதும் உயர்கல்வியாகிவிட்டது!)

ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முந்தைய நடப்பியலில் அப்படி ஒரு ஓட்டல் பையனாக ***'கூப்பிய கை'*** சிறுகதையில் காட்டுகிறார் ஆசிரியை. மிக நேர்மையுடன் வாடிக்கையாளரைக் கவரும்படி பணியாற்றுகிறான். பணியிலிருந்துகொண்டே படிக்கும் இலட்சியத்தையும் வளர்த்துக்கொண்டிருக்கிறான். சீமானான, நடுத்தர வயது வாடிக்கையாளரின் தேவைகளை உடனுக்குடன் அறிந்து நிறைவேற்றுவதால் அவரைக் கவர்ந்திருக்கிறான். அவர் கடவுள் பக்தி நிறைந்தவர்; கோயில் பற்றிக் கேட்கிறார். அருகில் எங்கோ ஆஞ்சநேயர் கோயில் இருப்பதாகத் தெரிவிக்கிறானே ஒழிய அவனுக்கு அந்த பக்தி இல்லை. வாடிக்கையாளர், ஒரு சமயம் பணப்பையை தவற விட்டிருந்தார். இக்கட்டான சமயம். யாரிடம் கேட்பார்? ஓட்டல் பையனிடம் உதவி கேட்கிறார். அவன் தன் சேமிப்பான அறுபது ரூபாயைக் கொடுக்கிறான். 'இனாம்' வாங்க மறுக்கும் பெருந்தன்மையாளன் என்று தெரியும். அறுபது ரூபாயோடு இன்னொரு பங்கும் போட்டு கவரில் மடக்கி அவன் சட்டைப்பையில் வைத்துவிட்டுப் போய்விடுகிறார்,

ஐந்தாறு ஆண்டுகள் சென்றபின் அவர் திரும்பி அதே ஓட்டலுக்கு வருகிறார். இருட்டாக இருந்த கோயிலில் விளக்குப்போட்டிருக்கிறது. யாரோ பண உபயம் செய்ததாக அறிகிறார். அவர் பெயர் . . . ? ஓட்டல் பையன் இப்போது ஒட்டல் பணியாளனில்லை. படித்து விட்டு சென்னை அலுவலகத்தில் தட்டச்சுக்காரனாகப் போய்விட்டான்! கடவுள் பக்திக்கு மேலான பண்பின் விளக்கம் '***கூப்பிய கை.'***

இன்னொரு வித்தியாசமான கதை, 'சொல் கேட்ட செல்வம்.' மனிதர் மட்டுமே, சொற்களினால் பாதிக்கப்படுகிறோமா? இல்லை. மாற்றலான் இடத்துக்கு பசுவையும், கன்றையும் ஒட்டி வருகின்றனர். ஆனால் வளர்ப்பு நாய், காரில் கொண்டுவரப்படுகிறது. புதிய இடத்தில் பசு நிறையத் தீனி தின்றாலும் பால் அதிகமாக கொடுக்கவில்லை. இதைக்கூறி எசமானி அங்கலாய்க்கிறாள், நண்பர்களிடம். மறுநாளே பசு இறந்து கிடக்கிறது; காரணம் தெரியவில்லை. அதேபோல் நாயின் வளர்ச்சி, அதன் உணவு ஆகியவற்றைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறாள், நண்பர்களிடம். ஒரு நாள் குழந்தையை நோக்கி வந்த பாம்பை அது குதறிக் காப்பாற்றியபோது, குழந்தையின் மீது கவனம் செலுத்தியவர்கள், நாயைக் கவனிக்கவில்லை; அது பாம்பு கடித்ததால் இறந்துவிட்டது. அதிகமாக சாப்பாடு போடுவதாகச் சொன்ன தீச்சொல் அந்த விலங்குகளைப் பாதித்து விட்டனவோ?

***'இளகிய தோஷம்'*** சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் 1957 ல் வெளியான சிறுகதை. சிறைவளகத்தில் மருந்துவராகப் பணியாற்றும் கணவனிடம் குழந்தையுடன் வருகிறாள் இளம் மனைவி. பாத்திரம் துலக்க, மாவிடிக்க, தண்டனை பெற்ற ஆண், பெண் கைதிகள் வருகிறார்கள். திருடர், கொள்ளையர் என்று குற்றம் புரிந்தவர்களைக் கண்காணிக்க வேண்டும் என்றாலும் கல்யாணி அவர்களை மனிதர்களாகப் பார்க்கிறாள். கைதி ஒருவன் தடாபுடா என்று பாத்திரங்களைப் போட்டுத் துலக்குகிறான்; இவள் 'சோறு, குழம்பு சாப்பிடுகிறாயா?' என்று கேட்டு இலைத்தேடி வருமுன் அவன் ஒரு கந்தல் காகிதத்தில் சோறு குழம்பைக் கலந்துவைத்து உண்ணும்போது மனமிளகிப்போகிறாள். மாவு இடித்தால் அந்தப் பெண்ணுக்கு அவ்வப்போது ஒரணா, இரண்டணா தருகிறாள். வாடிக்கை போல் ஒரு முறை அந்தப் பெண் கேட்டு வாங்கிக்கொள்கிறாள். கணவனுக்குக் கோபம் வந்து அவளைப் பிறந்தகத்துக்கு அனுப்பும்போது

'திருட்டுத்தனம்' செய்ததாகக் கடிந்துகொள்கிறான். இது மிக நுட்பமான மன உணர்வுகளை வெளியிடும் கதை. அன்பு வழியில் குற்றவாளிகளைத் திருத்திவிடலாம் என்று மன அறிவியல் படித்திராத கல்யாணி நம்புகிறாள்.

அந்தக்காலத்தில், கலைமகளுக்கிணையாக, கும்பகோணத்திலிருந்து ***காவேரி*** என்ற மாத இதழ் ஒன்று வெளிவந்தது. அமரகவி புனிதப்படுத்திய சுதேசமித்திரன் 1970 ல் நின்றுபோயிற்று. பாரிஜாதம், சிறுகதை என்ற பல இதழ்களிலும் இந்த ஆசிரியை தம் முத்திரையைப் பதித்துள்ளார். ***கலைமகள்*** இன்னும் வெளிவந்தாலும், பத்திரிகைகளின் போக்கு முழுக்க முழுக்க வாணிபத்தையே குறிப்பாகக் கொள்ளவேண்டிய இழிநிலை வந்துவிட்டது. எனவே மனிதத்தை மேம்படுத்தும் இலக்கியப் படைப்பாளர் அருகிவிட்டனர்.

மனித சமுதாயம், குடும்பம் என்ற அமைப்பின் வாயிலாகவே நாகரிகப் பரிணாமம் கண்டதெனலாம். தனித்தனி ஆண் - பெண் உரிமை பெற்ற சமுதாய அமைப்பு சக்திவாய்ந்ததாக இருக்க முடியாது. குடும்ப அமைப்பில் கணவன் - மனைவி, குழந்தைகள், சூழ்ந்த உறவுகள் எல்லாமே வலிமையுடன் இயங்குகின்றன. இது ஒரு முழுமையான அமைப்பு. இந்த அமைப்புகள் சமுதாயத்தை முழுவலிமையுடன் மனித உரிமைத் தொடர்புகளாக இயங்கச் செய்கின்றன. ஊடும்பாவுமான நூல் இணைப்பைவிட, முழுவளையச் சங்கிலிப் பின்னல்களால் இணைக்கப்பட்ட ஒரு துண்டோ, விரிப்போ அதிகவலிமை கொண்டு இழுத்துப் பிடிக்கவும், சுருக்கவும் கூடியதாக பயன்பாட்டைத் தருகிறதல்லவா?

இத்தகைய குடும்ப அமைப்பில் இயங்கு சக்தியாக விளங்குபவள் பெண். இந்தத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் அனைத்துக் கதைகளிலும் குடும்பம் சார்ந்த உறவுகளுடன் ஆண் - பெண் - குழந்தைகள் என்ற பிம்பங்களே மனதில் பதிகின்றன. வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களில், அபசுரம் இழைந்துவிடுமோ என்ற பதைப்பு ஏறும்போது, கோடு தாண்டாத நளினங்களில் கதை மாந்தர் முத்திரை பதித்துவிடுகின்றனர்.

பெண்மைக்கு இலக்கணம் வகுக்கவேண்டும் என்றால் அது தாய்மையின் கூறுகளைக் கொண்டதாகவே இருக்கிறது. கன்னியாக இருக்கையில் முதிர்ந்து வரும் கபடற்ற ஆசைகள், திருமணமாகி ஓய்வில்லாத் தலைவி என்ற நிலையில், எந்த ஓர் இக்கட்டான சந்தர்பத்திலும் தன் மன உறுதியை விட்டுக்கொடுத்து பிறர் நலம் காக்கும் பண்பைக் காட்டுகிறாள்.

கணவனுடன் வாழும் பேறற்ற முதியவள் சாவித்திரி. நோன்பைக் கடைபிடிக்க, இளம் தம்பதியாக பரிசயமாகும் குடும்பத்தில், அந்தப் பெண்ணுக்கு இயல்பாக நோன்பு நோற்கவேண்டும் என்று ஆதரவாக உதவிகள் செய்கிறாள். இதில் வற்புறுத்தல் இல்லை. ஆனால் நாணலாக இளம் மனம் வளைகிறது. ***'உருகாத வெண்ணை'*** கலைமகள் ஏப்ரல் 1953 இதழில் வந்த கதை.

வெள்ளிக்கிழமை, குத்து விளக்குப்பூசை, மடி என்ற _பெயரில் கடுமையான ஒழுக்கத்துக்கும், ஒடுக்குதலுக்கும், உலக நன்மைக்காகத் தன்னை ஆட்படுத்திக்கொள்ளும் பக்தி: இவைதான் ***'அரும்பிய முத்து'*** கதையில் நமக்கு புலனாகின்றன.

'காசியில் சென்று கட்டையை முழுக்கவேண்டும்.' அங்கு சர்வகலாசலையில் படிக்கும் இளைஞனிடம் ஊர்வரும்போதெல்லாம் சொல்லும் முதியவரின் ஆசை நிறைவேறிற்றா? பிடி சாம்பலும், அஸ்தியுமாக காசிக்கு வருகிறார். 'தவறிய சொல்' ஆனந்தவிகடனில் 1959 ல் வந்த கதை. அந்தக் கால நடப்பியல் வாழ்வில் நம்பிக்கை எந்நிலையிலும் ஆட்டம் காணவில்லை. 1956 ல் சுதேசமித்திரனில் வெளியாகி இருக்கும் 'சிறு குரல்' சாயிராம் என்ற சிறுவனின் பக்தி நம்பிக்கையில் இரண்டுங்கெட்டான் நிலையில் இருந்த நாயகி, வியாழக்கிழமை தபாலில் வந்த சாயி காசு சரட்டில் இடம்பெற்று நம்பிக்கையை உறுதியாக்குகிறது.

இக்காலத்தில் மனித உரிமைகள், பெண் விடுதலை என்ற நோக்கில், சமுதாயம் சார்ந்த ஏற்றத்தாழ்வுகள், பொருளாதாரம் சார்ந்தும், தொழில் பரம்பரை சார்ந்தும், அவற்றைப்

போக்கவேண்டும் என்ற விழிப்புணர்வு பரவலாக, பல படைப்பாளர் இடையே எழும்பி இருக்கின்றன. அந்த வினாக்கள் குடும்ப, சமுதாய மரபுகள், பெண்ணின் இடம் எல்லாவற்றையும் குறி வைக்கின்றன.

ஆனால், பெண்ணுக்கு, சமூகரீதியாகவும். குடும்பம் என்ற நிலையிலும் புராணகாலந்தொட்டு எத்தனையோ அநீதிகள் இழைக்கபட்டிருக்கின்றன. இன்னும் எத்தனையோ முன்னேற்றங்கள் வந்த பின்னும் பெண் இருத்தலுக்குப் போராடும் அவலம் நிகழாமல் இல்லை.

ஆனால், இந்த மனித சமுதாயம் சாதிமத பேதங்கள் கடந்த மனித சமுதாயமாகப் பரிமளிக்கச் செய்யும் போராட்டங்களில் பெண்ணே முனைந்து வருகிறாள் என்பது வெறும் சொல்லலல்ல. அவள் நம்பிக்கையுடன் கனவு காண்கிறாள். துன்பம் எதையும் சமாளிக்கக்கூடிய மன வலிமையைப் பெற, மரபுகள், சம்பிரதாயங்கள் என்று பற்றிக்கொண்டு தெய்வத்தன்மை நோக்கி முன்னேறுகிறாள். ஏனெனில் ஆணுக்கிருக்கும் அறிவார்ந்த துறைகளில் முன்னேற்றம் பெறும் வாய்ப்புகள் அவளுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றன.

புதுமைகள் என்ற பெயரில் இன்றைய இலக்கியப் படைப்புகளில் மனித மாண்புக்கு மாறான இலக்குகள் புகுந்துவிட்டன.

திருமிகு இந்தியாவின் அனைத்துச் சிறுகதைகளுமே, சுதந்திரப் போராட்டம் முடிந்து, இரண்டாம் உலகப் போர் தோற்றுவித்த சிதைவுகளில் இருந்து நம்பிக்கையுடன் முன்னேறும் காலகட்டத்தில் எழுதப்பட்டவை. புதிய ஊக்கத்துடன் மறுமலர்ச்சியை எதிர்நோக்கி இந்திய சமுதாயம் முன்னேறத் தொடங்கி இருந்த காலத்தை அனைத்துச் சிறுகதைகளும் 'சிலும்புகள்' ஆழ்ந்து விடாத அமைதியைப் பிரதிபலிக்கின்றன. பெண்ணின் மாண்பை விரிக்கும் இச்சொல்லோவியங்கள் அவளாலேயே ஆண் ஏற்றம் பெறுகிறான் என்ற கருத்தைப் பதிக்கவும் தவறவில்லை. படைப்புக் கலையில் என்றும் அழியாச் சிறு நட்சத்திரங்களாக இச்சிறு கதைகள் தமிழுக்குப் பெருமைச் சேர்க்கிறது. இந்தக் குறுகிய தமிழ் எல்லையிலிருந்து, உலகளாவிய ஆங்கில மொழிக்கு இப்படைப்புகள் கொண்டுசெல்லப்படும்போது ஒரு பொதுத்தன்மையும், தனித்தன்மையின் சிறப்புகளும் சேரும் என்பதில் ஐயமில்லை.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன், உதகை நகருக்கு நான் சென்றிருந்தேன். இராஜபவனத் தோட்டத்தினூடே இழையும் சிற்றருவி, நகரின் நடுப்பகுதியிலும் வரும். பந்தய மைதானத்துக்கருகில் அந்த அருவியைப் பார்த்தேன். அது சாக்கடையாக உருப்பெற்றிருந்தது. நாங்கள் பசிய வயல்கள் (Green Fields) என்று குறிப்பிட்டிருந்த இடங்கள் கான்கிரீட் காடாக மாறி இருந்தன.

இந்தச் சூழலில், திருமிகு இந்தியா தேவியின் இக்கதைத் தொகுதியைப் படிக்கையில் பழைய 'சொர்க்கலோக'ப் பசுமை அனுபவங்கள் மீள்கின்றன.

நான் நேரில் பார்த்திராத அமரர் விந்தியாவின் சிறுகதைத் தொகுப்புக்கு ஒரு முன்னுரை எழுதும் நேரம் வரும் என்று கனவிலும் கருதியதில்லை. இந்த அரிய வாய்ப்பினை என்னைத் தேடிவந்து அளித்திருக்கும் திருமிகு நாரணன், மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கும் என் இதயபூர்வமான வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். முற்றிலும் வாணிபமாகிவிட்ட எழுத்துக் களத்தில் இச்சிறுகதைகள் நல்ல சுவாசக் காற்றாக, புத்துயிரூட்டுவது உறுதி. உலகம் பயன் பெறட்டும்!

**********